# திருவெம்பாவையில் காணப்படும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள்

செ. பொன்னுசாமி

## 1. முன்னுரை

மக்களைச் சிவநெறியின்பால் செலுத்தும் பொருட்டு இறைவனின் திருவருளால் தோன்றிச் சைவர் தொண்டாற்றிய குரவர் பலர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் மாணிக்கவாசகர். தமிழ் வளம் கொழிக்கும் பாண்டி வளநாட்டின் தலைநகரமாகிய மதுரைக்கு அண்மையில் உள்ள திருவாதவூரில் ஆதி சைவ அந்தணர் மரபில் திருஅவதாரம் செய்தவர் மாணிக்கவாசகர். நான்கு சைவ சமயக் குரவர்களுள் ஞான மார்க்கத்தை நடத்திக் காட்டிய மணிவாசகப் பெருமான் அருளியது திருவாசகம் என்னும் நூல். இந்நூல் சைவர்களுக்குப் பிரமாணமான தமிழ் வேதம் பன்னிரு திருமுறைகளுள் எட்டாந் திருமுறையாக விளங்குகின்றது. இந்நூல் 51 பதிகங்களைக் கொண்டு திகழ்கின்றது. அவற்றுள் ஒன்றுதான் திருவெம்பாவை. இருபது பாடல்களைக் கொண்ட இத்திருவெம்பாவையானது சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பலவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது. எனவே, இத்திருவெம்பாவைப் பாடல்களில் புதைந்து கிடக்கும் சைவ சித்தாந்தக் கருத்துக்களை வெளிக் கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 2. திருவெம்பாவை பாடப்பட்ட வரலாறு

மாணிக்கவாசக சுவாமிகள் சிவபெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் பல தலங்களுக்குச் செல்கின்றார். பிறகு திருவண்ணாமலையை அடைந்து அங்கே தங்கியிருக்குங்கால் முன்பனிப் பருவத் தொடக்கமாகிய மார்கழி திங்கள் வந்தது. அப்பொழுது மணஞ் செய்யப் பெறாத பெண்கள் பலர் திருவாதிரைக்கு முன் பத்து நாள் தொடங்கி, அதிகாலையாகிய வைகறைப்

பொழுதில் துயிலுணர்ந்தெழுந்து ஒருத்தியும் பலருமாக இல்லங்கள் தோறும் சென்று, தம் தோழிகளையும் துயிலுணர்த்தி எழுப்பி விடுகிறார்கள். பிறகு அவ்வெல்லோரும் ஒன்று சேர்ந்து சிவபெருமான் திருப்புகழை வாயாரப் பாடிக்கொண்டு நீர் நிலைக்கு நீராடச் சென்ற காட்சியைக் கண்டபோது, தத்துவப் பொருளை உள்ளடக்கிய திருவெம்பாவையை அருளிச் செய்தார்கள் மாணிக்கவாசகப் பெருமான்.

### 3. 'திருவெம்பாவை' சொற்றொடர் விளக்கம்

திருவெம்பாவையின் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் 'எம்பாவாய்' என்ற சொற்றொடர் கொண்டு முடிவதால் இப்பதிகம் "திருவெம்பாவை" என்ற பெயரால் குறிக்கப்படுகிறது. "திருவெம்பாவை" என்ற சொற்றொடர் திரு + எம் + பாவை என்ற மூன்று சொற்களால் ஆகியது.

"திரு" என்பது அருள், "எம்" என்பது எங்கள் என்று பொருள் படுகிற பன்மைப் பொதுப் பெயர்; "பாவை" என்பது சித்திரப் பதுமை போன்ற பெண். "பாவை" என்ற சொல் ஆய் விளியுருபேற்று "பாவாய்" என்ற விளிப்பெயராயிற்று.

### 4. திருவெம்பாவையின் நோக்கம்

பாச இருளைப் போக்கி பேரருளைக் கொடுக்கும் ஆற்றல் உடைய திருவெம்பாவை பல நோக்கங்களைத் தன்னுள்ளே கொண்டுள்ளது. அவையாவன :–

அ. இறைவனது பேரருளைப் பெறுவது.
ஆ. பெண்கள் உலக உய்வுக்காக மழை வேண்டுதல்.
இ. சிவனடி மறவாத கணவன் தங்களுக்கு வாய்க்க வேண்டும் என விரும்புதல்.
ஈ. பார்வதி அம்மையாரை வழிபடும் முறைகளைக் கூறுதல்.
உ. பக்குவப்பட்ட உயிர்களுக்கு ஞானாசிரியனாக எழுந்தருளி இறைவன் அருளும் முறைகளைக் கூறுதல்.

### 5. திருவெம்பாவை பாடலில் கூறப்படும் செய்திகள்

| | |
|---|---|
| பாடல் 1 – 8 | சிறுமிகள் தோழிமார்களைத் துயில் எழுப்புவன. |
| பாடல் 9 | எல்லாத் தோழிமார்களும் தங்களுக்குள் உறுதிமொழி கூறிக் கொள்வது. |
| பாடல் 10 | ஈசன் பெருமையைக் கூறுவது. |
| பாடல் 11 – 18 | (16–ஆம் பாடலைத் தவிர) நீராடலைக் கூறுவன. |
| பாடல் 16 | மழை பெய்யுமாறு வேண்டுவது. |
| பாடல் 19 | சிவபெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் ஆட்பட வேண்டுதல். |

பொதுவாகக் கூறின் இருபது பாடல்களை உடைய இத்திருவெம்பாவை, மாயையில் அகப்பட்டிருக்கும் ஆன்மாவைத் தட்டி எழுப்பி ஞான வழியைக் காட்டுவதற்காக மாணிக்கவாசகர் அமைத்துள்ளார். திருவாதவூரர் பெண்களின் நீராடல் விளை–யாட்டினை ஒரு கருவியாகப் பயன்படுத்தி தம்மைப் பெண்ணாக உருவகித்து இறைவனின் அருமை பெருமைகளை மக்கள் எளிதாக உணரும் வகையில் படைத்தருளியிருப்பது சிறப்பாக இருக்கிறது.

## 6. திருவெம்பாவையில் காணப்படும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள்

உலக மக்கள் உய்வடைய வேண்டி மாணிக்கவாசகப் பெருமான் ஞான அனுபவமாகிய பெருநிலையிலிருந்து கீழிறங்கி வந்து பாடியருளிய திருவெம்பாவையின் உடகருத்துக்கள் உணர்த்தும் சைவ சித்தாந்தச் சிந்தனைகளை இனிக் காண்போம்.

### 6.1 நவசக்திகள்

திருவெம்பாவையில் ஈடுபட்டுள்ள பெண்களில், 12 வயதுடைய பெண்கள் தாங்களே முதலில் தூக்கத்தினின்று எழுந்து தமையொத்த பருவத்தினளான மற்றொரு பெண்ணை எழுப்பினாள் என்றும், இம்முறையே 11, 10, 9, 8, 7, 6, 5 என்னும் வயதினராகிய பெண்கள் எழுப்பப்பட்டனர் என்றும் திருவெம்பாவையில் முதல் செய்யுள் முதல் 8–வது செய்யுள் வரையில் கூறப்பட்டுள்ளது. அப்படி எழுப்பப்பட்ட எட்டு பெண்களோடு முதலில் எழுப்பிய ஒருத்தியையும் சேர்த்துக் கணக்கிட்டு ஒன்பது பேர்களாதலின் அவ்வொன்பது பேர்களும் நவசக்திகள் ஆவர் என்ற உட்கருத்தினை நமக்கு மறைமுகமாக கூற முயலுகிறார் மாணிக்கவாசகப் பெருமான். இவர்கள் முறையே மனோன்மணி, சர்வபூதமணி, பலப்பிரமதனி, பலவிகரணி, கலவினரணி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை முதலிய சத்திகளெனவும், இவர்களின் இயக்கத்தால் மாயை கட்டுப்பட்டு பிரபஞ்சம் நடைபெறுகிறது. இது குறித்தே இப்பகுதி “சக்தியை வியந்தது” என்னும் தலைப்பு கொடுக்கப்பட்டது எனவும் கூறப்படுகிறது. அது தவிர, அச்சக்திகளாவர் அம்பிகை, கனகம்பிகை, கௌரி, கங்கை, உமை, பராசக்தி, ஆதிசக்தி, ஞானாசக்தி, கிரியாசக்தி என ஒன்பதின்மர் எனவும் கூறப்படுகின்றது.

### 6.2 மலபரிபாகம்

இவ்வுலக மனிதர்களான நாம் இயற்கையிலேயே ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களால் பீடிக்கப்பட்டுள்ளோம். ஆனால் இத்திருவெம்பாவையில் காட்டப்பட்டுள்ள பெண்களானவர்கள் இந்த மும்மலங்களையும் கடந்து

இறைவனை அடையும் தறுவாயில் இருக்கின்றனர். இருப்பினும் ஆணவமானது தூக்கம் என்ற வடிவில் இவர்களது நோக்கத்தைத் தடுக்கிறது. எனவே இந்த ஆணவம் என்ற இருளை நீக்க வேண்டும். காரணம் இதுதான் நாம் இறைவனை அடையத் தடையாக இருக்கிறது. எனவே இத்திருவெம்பாவைப் பாடல்களில் தூக்கம் என்று அழைக்கப்படுவது நம்மிடையே இருக்கின்ற மும்மலங்களைப் பிரதிபலிப்பனவாகப் பொருள் படும்படி மாணிக்கவாசகர் இப்பாடல்களை அருளியுள்ளார். எனவே இறைவனை அடைய வேண்டுமெனில் நாம் மும்மலங்களிலிருந்து விடுபட வேண்டும் என்பதே இப்பாடல்களின் வழி உணர்த்தப்படும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் ஆகும்.

### 6.3 இறை உண்மையை உணர்தல்

*“ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்*
*சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்*
*மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்*
*மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்*
*வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து*
*போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்*
*ஏதேனு மாகாள் கிடந்தாள் என்னே என்னே*
*ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்”.*

என்று அமையப் பெற்றத் திருவெம்பாவையின் முதல் பாடலானது இறை உண்மைதனை உணர்த்தும் ஓர் உன்னதமான பாடலாக அமைந்துள்ளது எனலாம். அருட்பெரும் ஜோதியான இறைவனை மெய்யுணர்வு உடையவர்களே ஒளிப்பிழம்பாக உணர்ந்து அனுபவிப்பர். சூரிய, சந்திர, அக்கினி போன்ற ஒளியையே நாம் காணமுடியவில்லை என்றால் இறைவனைக் காண்பது எப்போது என்று வினா எழுப்பும் மாணிக்கவாசகர், இறைவனின் ஒளியைக் காண்பதற்காகக் கொடுத்தக் கண்களையும், இறைவனின் பெருமைகளைக் கேட்பதற்காகக் கொடுத்த காதுகளையும் நாம் முறையாகப் பயன்படுத்தவில்லை என்கிறார். இப்புலன்களை முறையாக பயன்படுத்தி இறைவனின் அருளை நாம் புரிந்துக் கொண்டோமானால் நம்மிடத்தில் இருள் நெருங்காது என்கிறார். மேலும் இறைவனை உணராதவரைக்கும் நமக்கு இவ்வுலகத்தின் மீது கொண்ட பற்றும் பாசமும் அதிகமாக இருக்கும். ஆனால் இறைவனோடு நாம் ஒன்றிணைந்த பிறகு நமக்கு வேறு இன்பம் இல்லை. தூக்கம் தரக்கூடிய மலர்ப்படுக்கையும் பின் இன்பமற்றதாக ஆகிவிடும். ஆகவே, இவ்வாறான நிலையையே பக்குவப்பட்ட நிலை என்பர். நாம் இவ்வாறான நிலையை அடைந்த பிறகு எல்லாம் இறைவனுக்கே என்பது

தெரியும். எனவே நாம் அனைவரும் இந்நிலைதனை அடைய வேண்டும் என்று தூண்டுவதே இப்பாடலின் மற்றொரு உட்கருத்தாக அமைந்துள்ளது எனலாம்.

### 6.4. மெய்யுணர்வு பெறுதல் வேண்டும்.

ஈசனானவன் தென்னாட்டை உடையவனாக இருப்பினும் அவன் அருள் உலகம் முழுவதும் வியாபித்துள்ளது. எனவே அவன் எங்கும் வியாபித்துள்ளான் என்ற மெய்யுணர்வு தேவை என்கிறார் மாணிக்கவாசகர். மேலும், நாம் என்னதான் கல்வியும் ஆற்றலும் பெற்றிருந்தாலும் இறைவனை வணங்காவிடில் முழுமை பெற முடியாது. எனவே, மும்மலங்களை அடக்க நாம் இறைவனை வணங்கித்தான் ஆக வேண்டும் என்கிறார்.

தொடர்ந்து இறைவனின் சொரூப இலக்கணம், தடத்த இலக்கணம் போன்றவற்றைக் கூறுகிறார். சொரூப இலக்கணமானது இறைவனின் சிறப்பு தாங்கி வருவதாகவும் இதற்கு உதாரணமாக ஜோதியையும் குறிப்பிடுகின்றார். இதனை நாம் கீழ்க்காணும் வரிகளில் காணலாம்.

"*ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை........* " தொடர்ந்து தடத்த இலக்கணமானது, அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூன்று நிலைகளைக் கொண்டது. இதனை முறையே உணர்தல் (அருவம்), பார்த்தல் (உருவம்), அடைதல் (அருவுருவம்) ஆகிய தன்மையுடையன என்கிறார். ஆகவே இறைவனின் திருவுருவத்தை ஈசனடியாருக்கு எடுத்துக் கூறும் நோக்கமும் இப்பாடலின் உட்கருத்தாக அமையப் பெற்றுள்ளது எனலாம்.

### 6.5. இறைவனை வணங்கும் முறை

"*முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்து எதிரெழுந்தென்*
*அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்*
*தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடை திறவாய்*
*பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்*
*புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ*
*எத்தோ நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ*
*சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை*
*இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.*"

இவ்வாறு அமையப் பெற்ற திருவெம்பாவையின் மூன்றாவது பாடலானது இறைவன்

அடியவர்கள்பால் செலுத்துகின்ற அன்பினை மறைமுகமாக உணர்த்துகிறது. இப்பாடல் பக்குவப்பட்ட ஒரு ஆன்மா பக்குவப்படாத மற்றொரு ஆன்மாவை எழுப்பி நீராடி, சிவ போகத்தில் திளைக்க அழைக்கின்ற கருத்தினைக் கூற முனைவதின் மூலம், நாம் இறைவனின் அன்பைப் பெறும் பொழுது தானாக போவதைவிட பலர் ஒன்று கூடி சேர்ந்து செல்வதே சாலச் சிறந்தது என்பதை விளக்குவதோடு, இல்லத்திலும் கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகிய அனைவருமே சேர்ந்து இறைவனை வணங்க வேண்டும் என்கிறார். ஒன்று சேர்ந்து வழிபடுவதையே சைவ சித்தாந்தமும் வலியுறுத்துகிறது என்பதே இப்பாடலின் உட்பொருளாக அமைந்துள்ளது எனலாம்.

### 6.6. இறைவன் பேரின்பம் அளிப்பவன்

திருவெம்பாவையின் நான்காவது பாடலானது இறைவன் பேரின்பம் அளிப்பவன் என்ற சிந்தனையை நமக்கு நினைவூட்டுகின்றது. தேவர்களுக்கு மருந்து போன்ற இறைவனை, அதாவது மருந்து போன்று நோய்களையும் துன்பத்தையும் நீக்குபவனான ஈசன் அமுதம் மட்டும் உண்ணாமல், நஞ்சையும் உட்கொண்டு நம்மை காப்பாற்றியுள்ளான். எனவே இப்படிப்பட்ட இறைவனை நாம் வணங்கினால் நமக்கு எல்லாவித பேரின்பமும் கிடைக்கும். காரணம் இறைவன் நமக்கு வரும் துன்பத்தை ஏற்றுக் கொண்டு இன்பத்தைத் தருவான். எனவே "தூக்கத்திலிருக்கும் பெண்ணே! நீ வந்து எண்ணிப் பார். எண்ணிக்கையில் குறைவாக இருந்தால் நீ போய் தூங்கு" என்று பொருள் படும் கூற்றானது பக்குவப்பட்ட ஆன்மாவானது பக்குவப்படாத ஆன்மாவை " நீ வந்து இறை இன்பத்தைப் பார். அப்படி பார்த்து விட்டால் மீண்டும் பழைய அனுபவத்திற்குப் போக மாட்டாய்" என்று உட்பொருள் படும்படி பாடப்பட்ட பாடல் வரிகள் இவ்வாறு அமைந்துள்ளன.

*"ஒண்ணித்தில் நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ*
*வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ*
*எண்ணிக் கொடுஉள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்*
*கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே*
*விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளைக்*
*கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்*
*உண்ணெக்கு நின்றுருக, யாமாட்டோம் நீயேவந்து*
*எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்."*

### 6.7. இறைவனின் தோற்றமும் அவனைக் காணும் வழிமுறையும்

திருமாலும் நான்முகனும் தாமே பெரியவரென்று ஒருவரோடு ஒருவர் செருக்கோடு

போராடினர். இருவரும் ஈசனின் முதலும் முடிவும் காண முயன்றனர். ஆனால் அறிவு உயர உயரப் பறக்கும் என்பதற்கேற்றபடி அகழ்ந்தும், பறந்தும் காணாது தோற்றனர். உலகினைப் படைத்தளித்து அழிக்கும் மூவருள் இருவராலேயே ஈசனைக் காணவியலாது போயிற்று. எனவே, 'ஞாலமே விண்ணே பிறவே அறிவறியான்'; 'ஞாலமாய் விசும்பாய் இவை வந்துப்போம் காலமாய் அந்த காலமும் கணக்கும் கடந்த மூல முதற்பொருளாய்த் திகழும் முழுமுதலான ஈசனை' நாம் வெறும் ஆராய்ச்சி அறிவினாலும், பொருளினாலும் அறியமுடியாது. அன்பினால் மட்டுமே அவனை அடைய முடியும். ஈசனானவன் அடியார்களை ஆட்கொள்ளும் பொருட்டாய் அருட்கோலங் கொண்டு வந்து, அவர்களின் குற்றங்களைக் களைந்து அவர்களைக் குணமென்னும் குன்றேறி நிலைக்கச் செய்கிறான். இங்ஙனம் நமக்கு அருள வந்த அருட்கோலத்தையும் குறை தவிர்த்து நிறைவாக்கும் அவனது பேரருள் சீலத்தையும் பாடி நுற்றல் வேண்டுமென்பதனால் கண்ணுக்கினிய திருமேனி அழகில் உருவ வழிபாட்டில் ஈடுபட்டு, பின்னர் கருத்துக்கினிய அவனது அருட் பெருங்குணக் கடலில் நினைத்தலும் வேண்டுமென்பது உட்கருத்து. இதனைக் கீழ்க்கண்ட பாடலின் வழி நாம் காண முடிகின்றது.

*"மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்*
*போலறிவோம் என்று உள்ள பொக்கங்களே பேசும்*
*பாலூறு தேன்வாய்ப்படிறீ கடைதிறவாய்*
*ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்*
*கோலமும் நம்மை யாட் கொண்டருளிக்கோதாட்டும்*
*சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று*
*ஓலமிடினும் உணராய் உணராய் காண்*
*ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்."*

மேலும் பேராற்றலைக் கொண்ட ஈசனை நாம் அடைய வேண்டுமெனில் ஆணவத்தை விட்டொழிக்க வேண்டும். நமது எண்ணத்தை ஒருநிலைப்படுத்தி ஈசன் மேல் வைக்க வேண்டும். எனவே, மயக்க உணர்வு கொண்டவர்களாலும், மனத்தை ஒருமுகப்படுத்தாமல் பலமுகமாகச் செல்ல விடுபவராலும் இறைவனைக் காண முடியாது என்ற மற்றுமொரு சைவ சித்தாந்தச் சிந்தனையும் இப்பாடலின் உட்பொருளாக அமைந்துள்ளது எனலாம்.

தொடர்ந்து இறைவனானவன் உருவம் இல்லாத நிலையிலும் உள்ளான். இருப்பினும் அவன் தான் நம் மும்மலங்களையும் அகற்றி நமக்கு அருள் புரிவதற்காக உருவம் தாங்கி வருகின்றார் என்ற சைவ சித்தாந்தக் கருத்தினையும் இத்திருவெம்பாவையின் 5–வது பாடலில் நாம் காண முடிகிறது எனலாம்.

### 6.8 அடியார்களை ஆட்கொள்ள ஈசன் ஆசாரியனாக எழுந்தருளல்

பாசத்தைப் பற்றிப் பாசமாய் நிற்கும் ஆன்மா, சிவ சார்பின் நீங்கி, மலச்சார்பைப் பெற்ற காலத்து, மயங்கி, அறிவிழந்து வன்நெஞ்சப் பேதையாயிருக்கும். அப்போது இறைவன் தோழனாகவும், ஆசாரியனாகவும் எழுந்தருளி, உண்மை உணர்த்தி, தன் தாள் சார வைப்பான் என்ற சைவ சித்தாந்த கருத்தினை திருவெம்பாவையின் 7–வது பாடலானது இவ்வாறு விவரிக்கின்றது.

*“அன்னே இவையும் சிலவோ பலவமரர்*
*உன்னற்கரியான் ஒருவன் இருஞ்சீரான்*
*சின்னங்கள் கேட்பச் சிவன் என்றேவாய்திறப்பாய்*
*தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகொப்பாய்*
*என்னானை என்னரையன் இன்னமு தென்றெல்லோமும்*
*சொன்னோங்கேள் வெவ்வேறா இன்னந்துயிலுதியோ*
*வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்*
*என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.”*

தொடர்ந்து, மன மொழி மெய்களால் வழிபடும் மெய்யடியார்க்கு இறைவன் பள்ளமடைப் பாயும் புனல் போலாவான்; ஆதலால் துயில் எழுந்து திருவடியைப் பாடி மனத்தை பள்ள மடையாக்கிக் கொள்ள வேண்டும் என்ற உட்கருத்தினை திருவெம்பாவையின் 6–ஆம் பாடலானது நமக்கு உணர்த்துகின்றது. இறைவனின் ஆட்கொள்ளும் தன்மைதனை நமக்கு பறைசாற்றுவதாக அமையும் இப்பாடலானது கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது.

*“மானே நீ நென்னலை நாளை வந்துங்களை*
*நானே எழுப்புவன் என்றலும் நாணாமே*
*போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ*
*வானே நிலனே பிறவே அறிவரியான்*
*தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்*
*வான்வார் கழல் பாடிவந்தோர்க்குன் வாய்திறவாய்*
*ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்*
*ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.”*

### 6.9 இறைவன் கால வரையறைக்கு அப்பாற்பட்டவன்

சிவபெருமான் கால வரையறைக்கு அப்பாற்பட்ட ஒப்பற்ற தலைவன் என்ற சைவ சித்தாந்த கருத்தினை திருவெம்பாவையின் 9–ம் பாடலானது மிகவும் அழகாக

இப்படி உணர்த்துகிறது.

*"முன்னைப் பழம்பொருட்டும் முன்னைப் பழம் பொருளே*
*பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே"*

எனவே இவ்வாறான தன்மை கொண்ட இறைவனின் அடியார்களாக இருக்கும் ஆண்களையே நாம் கணவனாகக் கொள்ள வேண்டும். காரணம் ஒத்த உணர்வுடையவரே ஒருங்கிணைந்து வாழ்தல் இயலும், உணர்வால் வேறுபட்டவர் களோடு வாழ்தல் பாம்போடு பழகுதல் போன்றது என்ற திருக்குறளுக்கு ஒப்பாகும் என்ற உட்கருத்தினையும், ஒரு குடும்பத்தில் உள்ள கணவன், மனைவி, பிள்ளைகள் அனைவருமே இறைச்சிந்தனை மிக்கவர்களாக இருத்தல் வேண்டும், அப்போது தான் இல்லறம் நல்லறமாகும் என்ற உட்கருத்தினையும் கீழ்க்கண்ட வரிகளின் வழி மறைமுகமாக நமக்கு உணர்த்த முனைகிறார் மாணிக்க வாசகப் பெருமான் அவர்கள்.

*"உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்*
*உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்கேபாங்காவோம்*
*அன்னவரே எங்கணவராவார் அவருகந்து*
*சொன்ன பரிசே தொழும் பாய்ப் பணிசெய்வோம்*
*இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்*
*என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்."*

தொடர்ந்து, மனிதர்க்கு இறைச்சிந்தனையானது மிக மிக அவசியம் என்பதனை மிகவும் அழகாக திருவெம்பாவையின் 8–வது பாடலில் உணர்த்துகிறார்.

*"கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்*
*ஏழில் இயம்ப இயம்பும் வெண் சங்கெங்கும்*
*கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை*
*கேழில் விழுப் பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ*
*வாழி யீதென்ன உறக்கமோ வாய் திறவாய்*
*ஆழியான் அன்புடைமை யாமாறு மிவ்வாறோ*
*ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை*
*ஏழை பங்காளனையே பாடேலோர் எம்பாவாய்."*

அதாவது கோழியும் குருகுமாகிய அஃறினைப் பொருள்களும் விழிப்புணர்வு கொள்ளும் பொழுதில், உயர்திணையைச் சேர்ந்த நாம் உள்ளுணர்வுக் கொண்டு அருட் பெரும் சோதியின் தனிப் பெரும் கருணையினைப் பாடிப் பரவுதல் வேண்டும் என்பது இப்பாடலின் உட்கருத்தாக அமைந்துள்ளது எனலாம்.

### 6.10 இறைவன் முதலும் முடிவும் இல்லாதவன்

"ஏழ்தலங் கடந்து நிற்பன் ஆதலின் அடிபேரில் பாதாளம் பேரும்" என்றார் காரைக்கால் அம்மையார். இறைவனது திருவடிப் புகழினைச் சொற்களாலும் வருணிக்க முடியாத காரணத்தால் '*சொற்கழிவு பாதமலர்*' என்று கூறிய மாணிக்கவாசகர் இவரது திருமுடியை எல்லாப் பொருள்களுக்கும் முடிவில் திகழும் என்றும் கீழ்க்கண்ட பாடலின் வழி நமக்கு உணர்த்துகின்றார்.

> *"பாதாளம் ஏழினும் கீழ்சொற்கழிவு பாதமலர்*
> *போதார் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே*
> *பேதை ஒரு பால் திருமேனி ஒன்றல்லன்*
> *வேத முதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்*
> *ஓத உதவா ஒரு தோழன் தொண்டருளன்*
> *கோதில் குலத்தரன் தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்!*
> *ஏதவனூர் ஏதவன் பேர் ஆருற்றார் ஆரயலார்*
> *ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்."*

எனவே ஊர் பேர் என்று இல்லாமல் வேதங்களுக்கும் விண்ணோர்களுக்கும் மண்ணுலகத்து மாந்தர்களுக்கும் இறைவனாகப் போற்றப்படும் சிவன் முதலும் முடிவும் இல்லாதவனாய்த் திகழ்கிறான். எனவே, சிவனே மற்றவர்களுக்கு முடிவைத் தருபவன், அவன் தொண்டர்களைத் தோழனாகக் கொண்டவன் என்ற உண்மைகளை மேற்கண்ட பாடலின் வழி மாணிக்கவாசகர் நமக்கு உணர்த்துகிறார். எனவே, அந்த குற்றமில்லாத தொண்டர் குழாத்தில் ஒருவராகி இறைபணியில் நில்லுங்கள் என்ற சித்தாந்தக் கருத்தினையும் உட்பொருளாகக் கொண்டு மேற்கண்ட திருவெம்பாவையின் 10–ம் பாடலானது அமையப்பெற்றுள்ளது எனலாம்.

### 6.11 ஆட்கொண்டருளும் விளையாட்டு

> *"ஐய்யா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்*
> *உய்வார்கள் உய்யும் வகை யெல்லாம் உய்த்தொழிந்தோம்*
> *எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்."*

என்ற திருவெம்பாவையின் 11–ம் பாடலில் காணப்படும் இறுதி மூன்று வரிகளானது அனைத்தையும் கடந்த பொருளாயிருக்கும் இறைவன் காலதேசங்களுக்கு கட்டுப்பட்ட உயிர்களைப் பாதுகாப்பதற்காகத் திருமேனி தாங்கி ஆட்கொண்டு திருவிளையாடல்கள் செய்கிறான் என்பதையும், மாயாசக்தி பரிபாகமானதால் வெளியிலே வந்து திரோதானமே திருவருளாக, அதனால் தன்முனைப்பு அடங்கி நின்று பேரின்பமாகிய நீரில் ஆடுதலையும், செம்மையும் வெண்மையுமாகிய நிறங்கள் இராசதம் சாத்துவிகம் என்னும் ஆளுமைக் குணத்தையும் அமைதிக் குணத்தையும்

உணர்த்துவன ஆதலின் படைத்தல் காத்தல்களைச் செய்பவன் ஈசனே என்னும் சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்குவனவாக அமைந்துள்ளன எனலாம்.

### 6.12 இறைவன் பிறவித்துயர் தீர்ப்பவன்

இந்த உலகத்தில் பிறப்பது துன்பம் தரும் என்று கூறுவர். அதே வேளையில் நம்முடைய அறியாமையைப் போக்கி அறிவினைத் தருவதற்குரிய கருவி எனவும் கூறுவர். எனவே இந்தத் துயர் நீங்க வேண்டும் என்றால் இறைவன் என்னும் அரும் புனலில் மூழ்க வேண்டும். எனவேதான் "*ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்*" என்று இறைவனைக் குறிப்பிட்டார் மாணிக்கவாசக சுவாமிகள். எனவே விண்ணும் மண்ணும் பிறவுமாகிய அனைத்தையும் படைப்பவர் காப்பவர் என இறைவன் திருவிளையாட்டின் பெருமையைப் புலப்படுத்துவதோடு, இறைவனுடைய அருளையும் புகழ்ந்துப் பாடச் செய்து உலகியல் வாழ்வினை அருள் நெறியிற் செலுத்திப் பிறவித் துயர் கெடச் செய்கிறார் மாணிக்கவாசகப் பெருமான். ஆகவே "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்ற பழமொழியின் தத்துவத்தை விளக்குவதாக கீழ்க்கண்ட திருவெம்பாவையின் 12–ஆம் பாடல் அமையப் பெற்றுள்ளது எனலாம்.

> "*ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும்*
> *தீர்த்தன் நற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்*
> *கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும்*
> *காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி*
> *வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்*
> *ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல் மேல் உண்டார்ப்பப்*
> *பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்*
> *ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்.*"

### 6.13 இறைவன் உயிர்களின் மும்மலங்களை அகற்றுபவன்

> "*பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்*
> *அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்*
> *தங்கள் மலங்கழுவுவார் வந்து சார்தலினால்*
> *எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த*
> *பொங்கு மடுவிற் புகப் பாய்ந்து பாய்ந்து நம்*
> *சங்கஞ்சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்*
> *கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்*
> *பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடு ஏலோர் எம்பாவாய்.*"

என்று அமையப்பெற்ற திருவெம்பாவையின் 13–ஆம் பாடலானது பொய்கையைச் சிவசக்தி மயமாகப் பாவித்து, அதில் நீராடுவது அம்மையப்பர் திருவருளில் நாம் தொய்வதாக உணர்த்துகிறது. எனவே பொய்கையானது எப்படி உடல் அழுக்கைப் போக்கிக் கொள்ள வந்து குளிப்பவரது அழுக்கையெல்லாம் அகற்றி துப்புரவு செய்கிறதோ அதுபோல அம்மையப்பரும் தம்மை வந்து சார்ந்து, ஆணவம், கன்மம், மாயை என்ற உயிரின் மும்மல அழுக்கைப் போக்கி முக்தி பெற விரும்புவோரை ஆட்கொண்டு அருள்கின்றனர். பொய்கை எவ்வாறு எல்லோரது அழுக்கையும் ஏற்ற போதிலும், தூய்மையாகவே விளங்குகிறதோ, அவ்வாறே அம்மையப்பரும் தம் அடியார்களது அழுக்கையெல்லாம் தாம் அகற்றியும், தம் நிகரில்லாத் தூய்மையாளராக திகழ்கின்றனர்.

தொடர்ந்து, இறைவனானவன் அடியவர்களை ஆட்கொண்டு, அவர்களை கோதாட்டி (மலத்தைப் போக்கி) அவர்களுக்குப் பேரின்பம் தருகிறான். அவன் தன்னையடைந் தார்க்கு இன்பங்களைத் தருகிற தத்துவன். அவனுடைய திருச்சின்னங்களைக் கேட்டு சிவனே! சிவனே! என்று பாடி சிந்தை களிகூர்ந்து செல்ல வேண்டும் என்பதனை திருவெம்பாவையின் 15–வது பாடலானது இவ்வாறு உணர்த்துகிறது.

*“ ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்*
*சீரொருகால் வாயோவாள் சித்தங்களி கூர*
*நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண் பணிப்பப்*
*பாரொருகால் வந்தனையால் விண்ணோரைத் தான் பணியாள்*
*பேரரையற்கு இங்ஙனே பித்தொருவர் ஆமாறும்*
*ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்*
*வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி*
*ஏருருவப் பூம்புனல் பாய்ந்தாடு ஏலோர் எம்பாவாய்.”*

**6.14 அஞ்ஞானத்தை அகற்ற வேண்டும்**

நாம் சிவத்தோடு சேர்தலை துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் ஆகிய மூன்று சம்பிரதாயங்களும் மூன்று முறைகளில் விளக்குகின்றன. ஜீவாத்மாவைப் பிரகிருதி யிடத்திலிருந்து பிரித்தெடுத்து பரம் பொருளோடு சேர்ப்பது பராசக்தியின் சீரிய செயல். எனவே அவனை வழிபடுவது நமது கடமை என்ற உட்கருத்தைத் திருவெம்பாவையின் 14–ஆம் பாடலானது இவ்வாறு விவரிக்கின்றது.

*“காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்*
*கோதை குழலாட வண்டின் குழாமாடச்*
*சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி*
*வேதப் பொருள் பாடி அப்பொருளாமாபாடிச்*

*சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார் பாடி*
*ஆதி திறம்பாடி அத்தம் ஆமா பாடிப்*
*பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்*
*பாதத்திறம் பாடி ஆடு ஏலோர் எம்பாவாய்."*

இங்கே பக்தியும் ஞானமும் ஒன்றித்து ஒளிர்கின்றதை நாம் காணமுடிகின்றது. அஞ்ஞானம் என்னும் குற்றம் அகலுமிடத்து ஜீவன் சிவரூபம் என்பது தெளிவாகும். மேலும் தானே சத்–சித்–ஆனந்தம் என்பது முடிந்த அனபூதி என்ற உட்கருத்து கீழ்க்கண்ட திருவெம்பாவையின் 17–ஆம் பாடலில் தென்படுகின்றது.

*"செங்கண் அவன்பால் திசைமுகன் பால் தேவர்கள் பால்*
*எங்கும் இலாததோர் இன்பம் நம்பாலதாக்*
*கொல்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி*
*இங்கு நம் இல்லங்கள்தோறும் எழுந்தருளிச்*
*செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை*
*அங்கன் அரசை அடியோங்கட்கு ஆரமுதை*
*நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்*
*பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்."*

### 6.15 இறை அருள் பெறும் முறை

அம்மையின் அருள் போல மழை பொழிக என வேண்டும் திருவெம்பாவையின் 16–வது பாடலானது அருளை பெறுதலில் மற்றவர்களை முன்னணியில் வைத்துத் தங்களைப் பின்னணியில் வைப்பது நல்மனத்தவர்களின் பேரியல்பாகும் என்ற உட்கருத்தினைக் உணர்த்துவதாக இவ்வாறு அமைந்துள்ளது.

*" தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு*
*முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே*
*என்னப் பொழியாய் மழை ஏலோர் எம்பாவாய்."*

### 6.16 எந்நேரமும் இறை சிந்தனை வேண்டும்

இரவாயினும் பகலாயினும் இறைவனையே கண்டு அவன் புகழே பேசி நிற்பவர்க்கு இரவென்றும் பகலென்றும் வேறு எதும் இல்லை. நமது கண்கள் இறைவனையே காண வேண்டும்; வாய் இறைவனது புகழையே பேச வேண்டும். எனவே 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது போல கனவிலும் நனவிலும் இறை அருளையே நினைத்து, அன்பரோடு கூடி அன்பர் பணிக்கு ஆளாகி நிற்பதே இன்ப நினைவாகும் என்ற சித்தாந்த சிந்தனையை திருவெம்பாவையின் 18–ஆம் பாடலானது இவ்வாறு

உணர்த்துகின்றது.

*"அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்*
*விண்ணோர் முடியின் மணித்தோகை வீறு அற்றாற் போல்*
*கண்ணார் இரவி கதிர் வந்து கார் கரப்பத்*
*தண்ணார் ஒளி மழுங்கித் தாரகைகள் தாமகலப்*
*பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளி சேர்*
*விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்*
*கண்ணாரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்*
*பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்து ஆடு ஏலோர் எம்பாவாய்."*

இதைத் தவிர்த்து, திருவெம்பாவையின் 19–ஆம் பாடலானது, இரண்டற்று ஒன்றாம் (அத்துவித) நிலையை அடைந்த உயிர்கள் இறைவனை நோக்கி, உடல் பொருள் ஆவி அனைத்தையும் உனக்கே ஆகுக என்கின்றன. நாங்கள் அநாதியான காலத்தே அடிமையானோம், அதனைப் புதிதாக்கிக் கொள்ளுகின்ற அச்சத்தாலே எனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் நிர்ப்பணிக்காகவே அமையும் பழ வரம் கேட்கின்றோம் என்ற வேண்டுகோளை உட்பொருளாகக் கொண்ட திருவெம்பாவையின் மேற்கண்ட பாடலானது இவ்வாறு அமைந்துள்ளது.

*"உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று*
*அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்*
*எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்*
*எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க*
*எம்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க*
*கங்குல் பகல் எங்கள் மற்றொன்றும் காணற்க*
*இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்*
*எங்கெழில் என் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்."*

இறுதியாக திருவெம்பாவையின் 20–வது பாடலோ, நிர்விகாரியாய் கிரியை அனைத்துக்கும் அப்பால் நிர்க்குண பிரம்மமாய் இருக்கும் பரமன் குணத்தோடு கூடியவனாய் வந்து பஞ்ச கிருத்தியங்களைச் செய்கிறான். ஜீவன்கள் சிறு நிலையிலிருந்து பெருநிலைக்குப் பரிணமித்து உயர்வடைவதற்கு இப்பஞ்ச கிருத்தியங்கள் பயன்படுகின்றன என்ற சைவ சித்தாந்தக் கருத்துக்களைக் கீழ்க்கண்டவாறு விவரிக்கின்றன.

*"போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்*
*போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்*

*போற்றி எல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்*
*போற்றி எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்*
*போற்றி எல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்*
*போற்றி மால் நான் முகனும் காணாத புண்டரீகம்*
*போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன் மலர்கள்*
*போற்றி யாம் மார்கழி நீராடு ஏலோர் எம்பாவாய்."*

**7. முடிவுரை**

"பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என்று பரம்பொருளே விரும்பிக் கேட்டதாக பாடப்பட்டப் பகுதி இத்திருவெம்பாவையாகும். இப்பாடல்கள் பண்ணினிமையும், பொருட் செறிவும், கலை நயமும் வாய்ந்த சொற்களால் கற்பவர் பயிற்சிக்கும் உணர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் ஏற்பப் பொருள் பொலியுமாறு அமைந்திருப்பதோடு மட்டுமல்லாமல் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பலவற்றையும் தன்னகத்தேக் கொண்டுள்ளன என்பதை இக்கட்டுரையின் வழி நாம் கண்டறிய முடிகிறது. எனவே, இத்தகையச் சிறப்பு மிக்க திருவெம்பாவையை நாம் பாடி, பரவசமடைந்து, ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களிலிருந்து விடுபட்டு சிவநெறி புகுந்து சிவானந்தத்தில் மூழ்கித் திளைப்போமாக.

## மேற்கோள் நூல்கள்


அருணாசலம், ப. (1969) **திருவெம்பாவை விளக்கவுரை,** கோலாலம்பூர்: அருள்நெறித் திருக்கூட்டம்.

அருணாசலம், மு. (1965) **திருவாசகம் – சில ஆராய்ச்சிக் குறிப்புக்கள்.** சிதம்பரம்: சைவ சித்தாந்த மகா சமாஜம்.

அருளம்பலவனார், சு. (1967) **திருவாசக ஆராய்ச்சியுரை (முதலாம் பாகம்).** யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தக சாலை.

இராமநாதன், கா. (1995) **திருவாசகத் தேன்.** மதுரை : விஜயா பிரிண்டர்ஸ்

சண்முகசுப்பிமணியன், மா. (1983) **திருவாசகத் தேனமுதம் (முதற் பகுதி).** சென்னை : அப்பர் அச்சகம்

சாரதா நம்பி ஆரூரன், டாக்டர் (1993) **பாவைத்தமிழ்.** சென்னை: அப்பர் அச்சகம்

சிதம்பரனார், சாமி. (1965) **மாணிக்கவாசகர் – மூலர் மணிமொழிகள்.** சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்.

சிவலிங்கனார், ஆ. (1992) **எட்டாந் திருமுறை.** சென்னை : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

சுப்பிரமணிய பிள்ளை ஜி. (1986) **திருவாசக நெறி.** சிதம்பரம் : மாணிக்கவாசகர் பதிப்பகம்.

சுப்பிரமணிய பிள்ளை, க. (1955) **திருவாசகம் (மூலமும் உரையும்)** சென்னை : திருமகள் விலாச அச்சகம்.

சுவாமி சித்பவானந்தர். **திருவாசகம்.** திருப்பராய்த்துறை : தபோவன அச்சுப்பள்ளி.

செங்கல்வராய பிள்ளை, வ. சு. (1966) **திருவாசக ஒளிநெறிக் கட்டுரை.** சென்னை : சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

சோமசுந்தரம் செட்டியார் (1954) **திருவெம்பாவை (மூலமும் உரையும்)** சென்னை.

திருவாசகன், ஆ. (1991) **திருவாசகம்.** சென்னை : அருள் – சுடர் பதிப்பகம்.

மாணிக்கவாசகர். (1954) **திருவாசகம்.** காஞ்சீபுரம் : முத்தமிழ் அச்சகம்.

மாணிக்கவாசகர். (1964) **திருவாசகம்.** திருவாவடுதுறை : திருவாவடுதுறை ஆதீனம்.

ராதா தியாகராஜன், டாக்டர். (1983) **திருவாசகத்தில் அருளியல்.** சென்னை : வானதி பதிப்பகம்.

விசுவநாதையர், ரா. (1954) **திருவாசக வியாக்கியானம் (முதல் பகுதி).** சென்னை : டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்.

விசுவநாதன், ஈ. ச. (1964) **வான்கலந்த வாசகம்.** கோலாலம்பூர் : மனோன்மணி புத்தக நிலையம்.

வீரபாகு பிள்ளை, எம். இ. (1957) **திருவாசகம் எளிய உரை.** சென்னை : ஒற்றுமை நிலையம்.